ஆட்சித் தலைவர்கள் இந்த அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்களா ? அப்படியென்றால், இந்த அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அரிஜன நலத் துறையினரும் இந்தப் பரிந்துரைகளைச் செய்தார்கள். அந்தப் பகுதியில் இருக்கிற கிராமங்களை இணைத்து ஒரு தனி வட்டாரமாக ஆக்க வேண்டும் என்பது கோரிக்கையாகும். அப்படி இணைத்துவிட்டால் அங்கிருக்கக்கூடிய பழங்குடி மக்களின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. தற்போதைய நிலையில் ஒரு தனி வட்டாரமாக அமைக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. டி. அண்ணாமலை : தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, உயர்ந்த மலைகளாக இருப்பதால் அங்கே கோடை வாசஸ்தலம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அங்குள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கே நிதி நிலை இல்லாத நேரத்தில் அவற்றை உல்லாச வாசஸ்தலமாக மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இருக்கிற சங்கடங்களைக் கனம் உறுப்பினர் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : கல்வராயன் திட்டத்தை மேற்கொள்வதில் அங்குள்ள நிலங்கள் யாருக்குச் சொந்தம் என்று பழம்பெருங்குடி தலைவர்களால் போடப்பட்ட வழக்கு இருக்கிறதே, அதனால் இந்தத் திட்டம் நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறதா? அல்லது இந்திய அரசினரின் ஆணைக்கிணங்க நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1967–68-ஆம் ஆண்டு நிதி நிலை வசதிக் குறைவினால் அதை எடுத்துக்கொள்ளவேண்டாமென்று இந்திய அரசாங்கம் நிறுத்திவைக்க கேட்டுக்கொண்டது. வழக்கு இருப்பது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பழங்குடி மக்களுடைய வளர்ச்சிக்காக வேண்டி ஒரே ஒரு இடத்தில் ஏற்றுக்கொண்ட திட்டத்தையும் நிறுத்தச் சொல்லிவிட்டார்கள் என்றால் அந்தத் திட்டமே கைவிடப்பட்டுவிட்டதா ? அல்லது நமது மாநிலத்தில் மட்டும் விட்டுவிடச் சொல்லி உத்தரவு போட்டுவிட்டார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்த மாநிலத்திலேயே சேலத்தில் கொல்லி மலை, ஏற்காடு முதலிய இடங்களில் இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கல்ராயன் மலைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதி வடிவம் எடுக்காததால் 1967–68 நிதி நிலையில் அதற்கு வசதியில்லை என்று சொல்லப்பட்டது.

One-unit system for post of Superintendent

* 155 Q.—Thiru A. M. RAJA,
THIRU N. S. V. CHITHAN,
THIRU K. CHEEMAICHAMY: } Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether the Secretariat Non-Gazetted Staff Association has represented that one-unit system should be brought into effect for the promotion of Assistants to the category of Superintendents ; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. THIRU C. N. ANNADURAI : (a) Yes.

(b) Orders have since been issued constituting the Departments of Secretariat except Law, Finance and Legislature, as a single unit at the level of Assistants for promotion as Superintendents.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் ஓர் அலகு முறையினைச் செயல்படுத்தியிருப்பதனால் ஏற்பட்டுள்ள அனுகூலங்கள் யாவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 1966–ஆம் ஆண்டில் இருந்தே அவர்களது சங்கங்கள் இதுபற்றி கோரிக்கை வைத்து விண்ணப்பங்கள் கொடுத்து வந்திருக்கின்றன. இப்போது அவர்கள மன நிறைவு பெற்றிருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ஓரலகு முறை சட்டத்துறை, சட்டப் பேரவைத்துறை, நிதித்துறை ஆகியவற்றுக்கு விஸ்தரிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதற்குக் காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சட்டத்துறைக்கு சில தனித் தகுதிகள் தேவைப்படுகின்றன. ஆகவே அதில் புகுத்தப் படவில்லை. சட்டப் பேரவைத்துறைக்கு தனி செக்ரடேரியட் இருக்கிறது. அதிலும் புகுத்தப் படவில்லை. நிதித்துறையில் தொடர்ந்து சில வழிமுறைகளை அனுசரிக்க வேண்டியதாக இருப்பதால் அதிலும் புகுத்தப்படவில்லை.

DR. H. V. HANDE : The most important cause of agitation, depression and dissatisfaction among the N.G.Os. is because of the high percentage of direct recruitment among gazetted officers. In view of that feeling among N.G.Os. will this Government at least revise the stand of previous Government and see to it that direct recruitment to the posts of gazetted officers is reduced and more N.G.Os. are given chances of promotion as gazetted officers. Unless this is done there will be terrible discontentment among N.G.Os. In view of their feeling in the matter, will this Government come forward to give a new orientation to recruitment policy ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Though the hon. Member's suggestion is good, the question before the House is about one unit system which has now been accepted by this Government.

போலிஸ் வழக்குகள்

*156 வினா.—திரு. பி. வேலுசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலீஸ் இலாக்காவில் ஒவ்வொரு காவல் நிலையத்தின் மூலம் மாதத்திற்கு குறிப்பிட்ட அளவு சந்தேகக் கேசுகள், சாராயக் கேசுகள், திருட்டுக் கேசுகள் பிடிக்க வேண்டும் என்ற முறை உள்ளதா ?

(இ) ஆமெனில், அதனை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.